[31st March 1969

விசைத் தறியாளர் சங்கம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழக விசைத் தறியாளர் சங்கம் அண்மையில் ஏதேனும் கோரிக்கை அரசுக்கு அனுப்பியதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ) ஆம். தொழிற்சாலைகள் சட்ட விதித்துறைகளின் கீழ் ஏற்கெனவே வராத விசைத்தறிகள், பிற நிறுவனங்களுக்கு இச்சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி 1967 செப்டம்பர் திங்களில் அரசு வெளியிட்ட அறிவிப்பை ரத்து செய்யுமாறு வேண்டி இச்சங்கம் அரசுக்கு முறையீடு ஒன்றை அனுப்பியது.

(இ) மேற்சொன்ன முறையீடும், அதேபோன்ற முறையீடுகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகையில், அரசு வெளியிட்ட அறிவிப்பு செல்திறனற்றது என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இந்த ரிட் மனுவை உயர்நீதி மன்றம் இன்னும் விசாரித்து முடிவு செய்யவில்லை. ஆயினும், ரிட் மனுவின்மீது ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை மேற்சொன்ன அறிவிப்பு செயல்படுவதை நிறுத்தி வைக்குமாறு உயர்நீதி மன்றம் கட்டளையிட்டுள்ளது. அரசு இது குறித்து உயர்நீதி மன்றத்தின் ஆணைகளை எதிர்பார்க்கின்றது.

Tamil Nadu State Transport Department Fares

*353 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that the fares charged in Private Express Buses starting from Madras are lesser than those charged in the Express Buses of the Tamil Nadu State Transport Department; and

(*b*) if so, the reason for not reducing the fares of the Express Buses of the Tamil Nadu State Transport Department?

அரசு போக்குவரத்துத் துறை பேருந்து கட்டணம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் .

(அ) சென்னையிலிருந்து புறப்படும் தனியார் விரைவு பேருந்துகளில் கட்டணம் தமிழக அரசு போக்குவரத்து விரைவு பேருந்துகளின் கட்டணத்தைவிட குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்திற்கான கட்டணத்தைக் குறைக்காத காரணமென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு போக்குவரத்துத் துறை நெடுந்தொலை வழித்தடங்களில் சீர் வசதி (**Luxury Coaches**) பேருந்துகள் விரைவுப் பேருந்துகளாக ஓட்டப்படுகின்றன.

Accident to a State Transport Bus

***354** *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a boy drove the Tamil Nadu State Transport bus parked near Jayankondam in May 1968;

(*b*) the damage caused due to the incident;